# ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி




மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
சோஷல் இன்டிகேட்டர்

மே 2022

# அறிமுகம்

2019 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் ராஜபக்ஷ ஆட்சியானது நாட்டிற்கு பரந்தளவிலான அடைவுகளை உறுதியளித்தது. தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன் பரந்த அளவிலான உறுதிப்பாடுகளுடன் கூடிய ஊழல் ஒழிப்பில் கவனம் செலுத்துவதோடு, நல்ல ஒழுக்கமான அரசியல் சூழலை உறுதி செய்யும் ஒரு பயனுள்ள ஆட்சிப்பொறிமுறை இதன் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

தற்போதைய ஜனாதிபதியினால் தான் மற்றும் தனது சகாக்களின் சுமார் மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தில் வெற்றியடைந்த கடந்தகால சாதனையைக் கருத்திற் கொண்டு, நாட்டை தலைமை தாங்க ஒரு வலிமையான நபருடன் கூடிய ஒரு கனவு அணி இருப்பதாகவும், பெருந்தொற்று ஏற்படுத்திய விளைவுகள் மற்றும் அதிகரிக்கின்ற பொருளாதார நெருக்கடி போன்ற சவால்களை சிரமமின்றி வென்று விடலாம் என்றும் தான் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த பிரஜைகளுக்கும் உறுதியளிக்கப்பட்டது.

அதி உச்ச கவனயீனம் மற்றும் மோசமான நிர்வாகம் காரணமாக வாக்குறுதிகள் பிரமாதமானதாக இருந்தபோதிலும் அவற்றிற்குப் பெருமளவான சவால்கள் வந்தன. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதியுதவி பெறுவது தொடர்பான எதிர்ப்பு, வரிக் குறைப்பு, அந்நிய செலாவணி கையிருப்பு குறைவு, இறக்குமதித் தடை மற்றும் இரசாயன உர இறக்குமதி முற்றாகத் தடை போன்ற விடயங்கள் நாடளாவிய ரீதியிலான உணவு மற்றும் மருந்து போன்ற அடிப்படையான அத்தியாவசியப் பொருட்கள், எரிசக்தி மற்றும் மின்சாரம் போன்றவற்றின் பற்றாக்குறையை தோற்றுவித்தது.

அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக அவற்றைப் பெற்றுக்கொள்ள மக்கள் வரிசையில் பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு மக்கள் தொகையில் கணிசமான அளவினர் தமது அன்றாட தேவைகளைப் பெற்றுக்கொள்ளல் கடினமாக அமைந்தது. இதன் விளைவாக அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்த ராஜபக்ஷ அரசு பதவி விலகக் கோரி நாடு முழுவதுமாக வன்முறையற்ற எதிர்பார்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இது தற்போதைய நெருக்கடி நிலைமையின் கீழ் மக்களின் அனுபவங்களை மதிப்பிடுகின்ற விஞ்ஞான ரீதியான கருத்துக்கணிப்பு ஆய்வாகிய ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி 2ஆவது அலையின் அறிக்கையாகும். இது மேலும், இலங்கை மக்களின் கண்ணோட்டத்தில் நெருக்கடிக்கான காரணங்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் போன்றவற்றை ஆராய்கின்றது.

இந்த ஆய்வானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணிப்பீட்டாய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் நடாத்தப்பட்டது. சோஷல் இன்டிகேட்டரானது, 1999 இல் ஆரப்பிக்கப்பட்டது முதல், பரந்த அளவிலான சமூக அரசியல் விடயங்கள் தொடர்பில் அளவு சார் மற்றும் பண்பு சார் ஆய்வு முறைமைகளில் ஆய்வுகளை நடாத்தியுள்ளது. இந்த ஆய்வுக் குழுவில் கலாநிதி பிரதீப் பீரிஸ், சகினா மொய்னுதீன், மா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் இஷாரா ஜயரத்ன ஆகியோர் உள்ளனர். நாட்டில் இத்தகைய இயல்பிலான ஆய்வொன்றை நடாத்துவதற்கு தமது ஆதரவை வழங்கிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவிற்கு எமது மனமார்ந்த நன்றிகள். இந்த ஆய்வில் பெருமதிமிக்க ஆய்வுசார் உதவிகளை வழங்கிய கௌசி தம்மலகேவிற்கு எமது பாராட்டுக்கள். அட்டைப்பட உதவி: செல்வராஜா ராஜசேகர், ஆசிரியர், 'மாற்றம்' இணையதளம் (https://maatram.org) மற்றும் நஸ்லி ஹமீட்

# முறைமை

ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டியானது (2ஆவது அலை) பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தினைப் பயன்படுத்தி நான்கு பிரதான இன சமூகங்களைச் சேர்ந்த (சிங்கள, தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) 1200 பதிலளிப்பவர்களை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் 25 மாவட்டங்களிலும் வெளிக்கள ஆய்வாளர் மற்றும் பதிலளிப்பவர் ஆகிய இருவரினதும் முதல் மொழியில் நேருக்கு நேர் நேர்காணலகள் மேற்கொள்ளப்பட்டன. மாதிரி பகிர்வானது நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிராமிய மற்றும் நகர்ப்புறங்களைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரி இடம் தெரிவு செய்யப்பட்டதுடன், பதிலளிப்பவர்களைத் தேர்ந்தெடுக்க பனிப்பந்து மாதிரி நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

களப்பணியினை ஆரம்பிப்பதற்கு முன்னர், வெளிக்கள ஆய்வாளர்களுக்கு வினாக்கொத்து மற்றும் வெளிக்கள நுட்பங்கள் குறித்து விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. வெளிக்கள ஆய்வாளர்களுக்கான பயிற்சியானது அவர்களின் முதல் மொழியில் மேற்கோள்ளப்பட்டது.

ஆய்வுக்கான வெளிக்களப்பணிகள் 2022, ஏப்ரல் 19 முதல் 25 வரை நடாத்தப்பட்டன. நான்கு பிரதான இன சமூகங்களைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் என மொத்தம் 62 வெளிக்கள ஆய்வாளர்கள் ஆய்வில் பங்கேற்றனர். சேகரிக்கப்பட்ட தரவின் தரத்தை உறுதி செய்வதற்காக மொத்த மாதிரியில் 10% மீள்சரிபார்க்கப்பட்டன. மக்கள் தொகையின் உண்மையான மாவட்டம் மற்றும் இன விகிதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பு மதிப்பேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத் தொகுப்பானது பகுப்பாய்வு செய்யப்பட்டது

# ஆய்வின் பிரதான முடிவுகள்

## மக்களின் அனுபவங்கள்

- கடந்த ஒரு மாத காலத்தில் தாம் அல்லது தமது குடும்பத்தில் எவரேனும் எரிவாயு, எரிபொருள், பால்மா, உரம், அல்லது இது போன்ற ஏதேனும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வரிசையில் இருக்க நேர்ந்ததாக 88% மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த அனுபவமானது கிராமிய மற்றும் நகர்புறங்களைச் சேர்தவர்கள் மற்றும் அனைத்து இனத்தவர்கள் மத்தியில் காணப்படுகின்றது.
- பொருளாதார நெருக்கடி காரணமாக தமது அல்லது தமது குடும்பத்தில் எவரேனும் ஒருவரின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாக அதி பெரும்பான்மையினர் (90%) தெரிவிக்கின்றனர்.
- தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக நடாத்தப்படுகின்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏதேனும் ஒன்றில் பதிலளிப்பவர்களில் கிட்டத்தட்ட அரைவாசி அளவானவர்கள் (48.5%) தாங்கள் அல்லது தமது குடும்பத்தில் எவரேனும் பங்குபற்றியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

## நெருக்கடி நிலைக்கு காரணம்

- பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் (62%) தற்போதைய நெருக்கடி நிலைக்கு காரணம் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவம் என தெரிவிக்கின்றனர். இன அடிப்படையில் பார்க்கும் போது, அனைத்து இனத்தவர்களிலும் பெரும்பான்மையானவர்கள் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தற்போதைய அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தின் மீது குற்றஞ்சாட்டுகின்றனர்.

## நிலைமை சீரடைதல் தொடர்பான நம்பிக்கை

- நாட்டின் தற்போதைய நிலை சீரடைய நீண்டகாலம் செல்லும் என 60% நினைக்கின்றமையின் அடிப்படையில் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மக்கள் சந்தேகம் கொண்டிருப்பது தெரிகின்றது. மேலும் நாட்டின் நிலைமை எப்போது சீரடையும் என தங்களுக்குத் தெரியாது என பதிலளிப்பவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் தெரிவிக்கினறனர்.

## முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பான அபிப்பிராயம்

- குறிப்பிட்டளவு பெரும்பான்மையானவர்கள் (87.3%) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கினறனர்.
- பதிலளிப்பவர்களில் கிட்டத்தட்ட 90% பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கினறனர்.
- பதிலளிப்பவர்களில் பத்தில் ஒன்பது பேர் இலங்கை அரசியலில் இருந்து ராஜபக்ஷ குடும்பம் விலக வேண்டும் என்ற அபிப்பிராயத்தை கொண்டுள்ளனர். இந்த அபிப்பிராயம் இன, வயது மற்றும் பிரதேச அடிப்படையில் அனைத்து தரப்பினர் மத்தியிலும் உள்ளது.
- கிட்டத்தட்ட 74% த்தினர் தற்போதைய நெருக்கடியில் இருந்து மீளும்வரை பாராளுமன்றத்தில் இருக்கும் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று தெரிவிக்கின்ற அதேவேளை கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பகுதியினர் இதனை எதிர்க்கின்றனர்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் பதவி விலக வேண்டும் எனும் கோரிக்கை தொடர்பில் பார்க்கையில், பதிலளிப்பவர்களில் கிட்டத்தட்ட 60% இதனை ஏற்றுக்கொள்கின்றனர், கிட்டத்தட்ட 34% இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த விடயம் தொடர்பில் அபிப்பிராயம் எதுவுமற்ற பதிலளிப்பவர்களில் முஸ்லிம்கள் அதிகமாகும்.
- குறிப்பிட்டளவு பெரும்பான்மையானவர்கள் (75%) நிறைவேற்று ஜனாதிபதி முறை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கின்றனர்.
- கிட்டத்தட்ட 74% 20ஆவது சீர்திருத்தம் நீக்கம் செய்யப்பட்டு 19ஆவது சீர்திருத்தம் போன்ற ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர்.
- குறிப்பிட்டளவு பெரும்பான்மையானவர்கள் தற்போதைய நெருக்கடியில் இருந்து மீளும்வரை நாடானது நிபுணர்கள் குழுவினால் ஆளப்பட வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கினறனர்.
- பதிலளிப்பவர்களில் அதி பெரும்பான்மையினர் (96.2%) சகல அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் அவர்களது கணக்கில் வராத செல்வங்கள் அரசால் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கின்றனர். இந்த விடயத்திற்கு இன, வயது மற்றும் பிரதேச அடிப்படையில் அனைத்து தரப்பினர் மத்தியிலும் ஆதரவு உள்ளது தெரிகின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +94(11)2081384-6
இணையதளம்: http://www.cpalanka.org/

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 6/1B,1/1, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +94112 826 010
இணையதளம்: http://cpalanka.org/survey-research/
மின்னஞ்சல்: krishna@cpasocialindicator.org